Phone No. 4502 Regd. No. M. 5458
விலை அணா ஒன்று [இலங்கை 10 சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (30—12—49) வெளியீடு (31—12—49) [இதழ் 130

எல்லாந் தெரிந்தவை போல் நடிக்கும் ஏதுந் 'தெரியாததுகள்'!

சமதர்மக் கட்சியாரின் 'சம்யோஜித' சாடுதல்கள்!

சம்சயமுறுவதா, ஆச்சரியப்படுவதா?

சமத்துவம் கோரினர்: ஜாதிமுறை கடிந்தனர்!

நாட்டுக் கைத்தொழில்களும், வளந்தரும் மற்ற சாதனங்களும் பொது மக்கள் நலத்தை மனதிற் கொண்டு நடத்தப் பெற்றுல் தான், தொல்லை தரும் பிரச்னைகள் பலவும் தீர வழியேற்படும். இன்று மக்கள் மிக மிக வேதனையுள்ளத்தோடு இருக்கின்றனர்; காரணம், காங்கிரஸ் மீதும், சுதந்தர இந்திய சர்க்கார் மீதும் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கைகளனைத்தும் தகர்ந்து பொய்யாகிவிட்டமையேயாகும். சர்க்கார் பலமற்று வீற்றிருக்கிறது. நேரு ஆட்சியைக் காட்டிலும் வேறொரு ஆட்சி இதை விட நலமுக ஆண்டு விட முடியுமாவென அடுத்தடுத்துக் கேட்கப்படுகிறது. பொது மக்கள் நலத்தை மனதிற்கொள்ளும் வேறு எந்த ஆட்சியும் இதைவிட ஆயிர மடங்கு உயர்வாக ஆட்சி செலுத்த முடியும். ஆட்சிக் கடிவாளத்தைக் கொடுத்துப் பாருங்கள்; பிறகு காண்பீர்கள்.

தங்களுடைய தியாகம் ஏழையர் துயர்துடைக்கவேயன்றி, பணமூட்டைகளைக் கொழுக்க வைப்பதற்கல்லவென்று நிலை வந்துறுமேல், லட்சாதி லட்சம் பாட்டாளி மக்கள் எந்த அளவுக்கும் தியாகத் தீயில் குதிக்கத் தயங்க மாட்டார்கள், —அசோக்மேத்தா.

கோடானு கோடி மக்களின் உழைப்பின் பயனை ஒரு சிலர் உறிஞ்சி வாழ, இன்றைய சமுதாயம் அனுமதிக்கிறதே! இது நாஸதகமாகாதா? மக்கள் கூட்டமொன்றை அடிமைப் படுகுழியில ஆழ்த்தி வைத்திருக்கத் துணை செய்யும ஜாதி முறை பாவத்தின பாற்படாதாவெனக் கேட்கின்றன. ஆன்மீகத்துக்கும் இத்தன்மைக்கும எத்தனை தூரம்!

சமத்துவம், மானிட உரிமை இன்னபிறவற்றின் அடிப்படையில் சமுதாயத்தைச் சீரமைத்தாக வேண்டும். சமுதாயத்தில் ஒரு வகுப்பார் இனனொரு வகுப்பாரைவிட உயர்ந்த வராகக் கருதப்படுவதும் இன்னும் அது போன்ற காலத்துக்கொவ்வா காட்டுமிராண்டிக் கொள்கைகளும் இனியும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. இம்முறைகள் தொடர்ந்து இருந்து வருமேல், சமுதாயச் சீரழிவு நேரிடும. —அச்சுத பட்டவர்த்தன்

சோஷலிஸ்டுத் தலைவர்கள் தோழர்கள அசோகமேத்தாவும், அச்சுதபட்டவர்த்தனும முறையே 26, 27-ந்தேதிகளில் சூரத்தில ஆற்றிய சொற்பொழிவுகளின பகுதிகள் இவை. நேருவை மட்டந் தட்டிக் கொடுத்து, பலவீனத்து பசப்பிக்கொண்டு, அவனவரின் ஆட்சியை எந்த அளவுக்கும் கடிந்துரைக்குங் கொள்கையரே நமது சோஷலிஸ்டுத் தோழர்களென்றபோதிலும், பொதுத் தேர்தல்கள நெருங்க நெருங்க, பொங்கியெழுகிறது அவர்கள தம ஆவேச — உத்வேக — உணர்ச்சி யென்பதை நாம் தெரிந்துதானிருக்கிறேமென்றபோதிலும், சமதாமக் கட்சித் தலைவர்களாகிய இவர்கள வெளியிட்டிருக்கும் கருத்துரைகள் நாட்டின நடப்பை—சர்க்கார் போக்கை அப்படியே சித்ரிக்கக்கூடியனவாயிருப்பதாலும், காங்கிரஸின பிற்போக்குத் தலைமையும், முதலாளித்துவத்தின ஆதிக்கவுணர்வும், தன்னலமிக்க ஜாதி வெறியர்களின அக்ரமப் பாவப் போக்கும எந்த அளவுக்கு சந்தி சிரிக்கும் தன்மையை எய்திவிட்டனவென்பதை எடுத்துக்காட்ட

இவற்றை வெளியிட வேண்டிய கட்டப்பாட்டிலிருக்கிறேம்.

எல்லாந் தெரிந்ததுபோல் நடிக்கும், சில 'ஏதுந் தெரியாததுகள்' அடுத்தடுத்து 'நேரு ஆட்சியைக் காட்டிலும் இன்னொரு ஆட்சிவந்து, இதைவிட நன்முய ஆட்சி செலுத்திவிட முடியுமா' என்று கூறுவதைக் கேட்டிருக்கிறேம். மக்கள் நலத்தை மனதில வைத்து, நாட்டு வளத்தைத்தக்க முறையில் பயனபடுத்த வேண்டுமென்ற நலவெண்ணத்தோடு பாடுபட— அரசாள— முனைவரும யாரும இதைவிட ஆயிர மடங்கு உன்னதமாக ஆட்சி நடத்திக் காட்ட முடியும; சந்தேகமிருப்பின், ஆட்சியை ஒப்படைத்துப் பாருங்களென்த தோழர் அசோக மேத்தா அறைகூவல் விடுத்திருப்பது குறிப்பித்தக்கதாகும். இன்றைய தினம ஆட்சிப்பீடத்திலேறி வீற்றிருப்போரின் அரசியலாட்சி அனுபவம என்னவென்பதையும், மக்கள் நலம் எந்த அளவுக்கு அவர்கள் உள்ளத்தில ஆழ்ந்து பதிந்திருக்கிறதென்பதைரும், முதலாளி வர்க்கத்துக்கும அவர்களுக்கு

[தொடர்ச்சி 5 ... பார்க்க]

பிறருக்குப் புத்தி சொல்லிக் கொண்டு பொழுதைப் போக்குவதால் பயனில்லை

உருப்படியான செயலில் ஒவ்வொருவரும் இறங்க வேண்டும்

பண்டித நேருவின் அனுபவ உரை

புதுடில்லி, டிச 29—

"பிறருக்குப் புத்திமதி கூறுவதுடன் நாம நின்றுவிடுகிறேம அதுவே நம்மிடமுள்ள பெரும குறை. ஒவ்வொருவரும் தங்கள் வேலையைப் பிறருக்கென்று ஒதுக்கி வைக்காமல் தாங்களே செய்ய வேண்டும், அப்பொழுது தான் தேசம உருப்படும்" என்று பிரதம மந்திரி பண்டித நேரு குருகோவிந்தசிங பிறந்த நாள விழாவில் பேசுகையில கூறினார்.

சர்க்கார் அதிகாரிகள் செய்யும் வேலையைக் குறித்து மனம வருந்தி அவர் கூறியதாவது:—

காரியம் ஆக வேண்டும் என்ற நோக்கத்துடன யாரும் எதுவும் செய்வதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் உத்தரவு பிறப்பிக்கிறார்கள். அத்துடன் தங்கள் பொறுப்பு தீர்ந்துவிட்டது என்று நினைக்கிறார்கள். 'பைல'களில் எழுதிக்கொண்டே போகிறார்கள். பின்னர் அந்த 'பைல்' எங்கோயோ மூலைக்குப் போய்விடுகிறது என்ன செய்ய வேண்டும் என்று அதில் எழுதப்பட்டது, அதோடு காற்றில் போய்விடுகிறது. பின்னர் அவ்விஷயத்தில, என்னுல கூட எதுவும செய்ய முடிவதல்லை.

தேசத்தில் இவ்வழக்கம் நன்றாக வேரூன்றியிருக்கிறது. இதை ஒழிப்பது பிறரை செய்யச் சொல்வதை விட தானே காரியத்தை முடிக்க ஒவ்வொருவரும் முன் வரும வரை தேசம் முன்னேற முடியாது

ஆந்திரத் தலைநகர்

புதிய ஆந்திர மாகாணத்தில் தலைநகரை சென்னைக்கு வெளியே ஆந்திர பகுதியிலேயே வைத்துக் கொள்வதென்பதில் எல்லோரும் இணக்கம் தெரிவித்து விட்டனரென்பதாக பிரதமர் குமாரசாமி ராஜா டிச. 28ல் வெளியிட்டார்.

ஆந்திராவுக்குத் தனி உயர்நீதி மன்றம்

ஆந்திராப்பகுதிக்குத் தனி உயர் நீதி மன்றம் அமைக்க வேண்டியதை யொட்டி, சென்னை உயர்நீதி மன்றத்தைத் திருத்தியமைப்பதற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய வழி வகைகள் பற்றி ஒரு முடிவு ஏற்பட்டு விட்டதாம்.

காஞ்சிபுரம் :: கல்லூரி

1950 முதல் துவங்கிவிடும்

காஞ்சீபுரத்தில் கல்லூரியொன்று நிறுவ அண்மையில் அமைக்கப் பெற்ற கமிட்டி, 1950-கல்வியாண்டு துவக்கத்திலேயே மேற்படி கல்லூரியைத் துவக்கிவிடலாமெனப் பெரிதும் நம்புகிறது. ஆரம்பத்தில் தற்காலிகமான கட்டிடங்களிலேயே கல்லூரி துவக்கப்படுமெனத் தெரிகிறது. பல்கலைக் கழகத்துக்குக் கட்டுவதற்கு ரூ. 1,50,000 நன்கொடை திரட்ட கமிட்டி திட்டமிட்டுள்ளதாம். ராஜா. சர். முத்தையா செட்டியார் முதலாவதாக ரூ. 1,001 நன்கொடை தந்துள்ளாரென அறியப்படுகிறது.

காஞ்சிபுரம் தோழர் சி. கந்தசாமி முதலியார் அவர்கள் அளித்த பெருந்தொகையான ரூ. 50,000—மும கல்லூரிக் கட்டிடங்கள் நிறுவனத்துக்குப் பயன்படுத்தப்பெறுமென அறிவிக்கப்படுகிறது.

மத பிக்ஷுக்களிடையே அரசியல் விவாதம்

ரங்கூன் மடத்தில் அடிதடியில் முடிந்தது!

ரங்கூன், டிச. 29—

ரங்கூனில் பிரபல ஆலயமான ஷவேடாகன் 'பகோடா'வுக் கருகிலுள்ள புத்த மடத்தில், சீனுவில ஏற்பட்டுள்ள அரசியல மாறுதல குறித்து, புத்த பிக்ஷுக்களிடையே விவாதம நடைபெற்றது.

பேச்சுகள் மிகவும் காசாரமாகி முடிவில் இரு பிக்ஷுக்களிடையே அடிதடி ஏற்பட்டுவிட்டது.

ஒரு பிக்ஷு மாசேதுங் நிர்வாகத்தில சீனு சிறந்து விளங்கும் என்றுராம, மற்றொருவர் சியாங்கேஷேக் நிர்வாகம தான் நாட்டிற்கு நல்லது என்றுராம். இந்த அடிதடியினுல் இருவருக்கும படுகாயம் ஏற்பட்டிருக்கிறது. பக்கத்திலுள்ளவர்கள் தடுத்து அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஹைனன் தீவு மீது படையெடுக்க கம்யூனிஸ்டுகள் முஸ்தீபு

—(0)—

பார்மோஸாவில் சியாங் படை திரட்டுகிறாராம்!

ஹாங்ஹாங், டிச. 29—

ஹைனன் தீவின் மீதும், தென் சீனுவின் கோடியிலுள்ள மாகாணமான குவாங்டங் மீதும் படையெடுக்க சீன கம்யூனிஸ்டுகள் பெரு முயற்சி செய்து வருவதாகத் தெரிகிறது. இப்பொழுது சியாங் படையினருடைய பிரதேசம், குவாங்டங் மாகாணமும் பார்மோஸாவும் தான். பார்மோஸாவில் 200,000 துருப்புகளை சியாங் [illegible] சேர்த்திருக்கிறார் என்றும் [illegible]ப்படுகிறது.

மலேயாவுக்கான ஐ. நா. வின் குழந்தை நலத் திட்டம்

கோலாலம்பூர், டிச. 29—

மலேயாவில் குழந்தை நலனுக்காக ஐ. நா. சர்வதேச சிசுக்ஷேம நிதி ஸ்தாபனம் ரூ. 500000 ஒதுக்கி வைத்திருக்கிறது.

மாலை மணி
சென்னை 30—12—46 வெ[illegible]

வரைக வரலாறு!

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, திருத்தப்பட்டு ஒழுங்குபட எழுதப் படவேண்டும் என்றகருத்தை,வரலாற்றாசிரியர்களும், நாட்டுத் தலைவர்களும் பலகாலமாகவற்புறுத்தி வருகின்றனர். வழக்கம்போல், இவ்வாண்டுகட்டாக்கில் கூடிய இந்திய வரலாற்றுக் காங்கிரஸின் 12-வது மாநாட்டிலும், அக்கருத்து, கலந்து கொண்ட அனைவராலும் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை, நல்லவிதத்தில் நிறைவேற்றிவைக்கும் முறையில், நடவடிக்கைகள் ஏதேனும் உருப்படியாக எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை!

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு பல்வேறு வண்ணக் கண்ணாடிகளிலிருந்து சிதறுண்டு கிடக்கும் கண்ணாடிச் சில்லுகளை, அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பொறுக்கி ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பது போல் காணப்படுகிறதே யல்லாமல், ஒரே கண்ணாடியாக, ஒழுங்குபட்ட பரப்புடையதாக இருக்கவில்லை. காரணம், இந்தியத் துணைக் கண்டம், பல்வேறு இனம், பல்வேறு மதம், பல்வேறு மொழி, பண்பு - பழக்க வழக்கம்—கலை—நாகரிகம்—கொள்கைகோட்பாடுடைத்த நாடுகள் கொண்ட நிலப்பகுதியாக விளங்குவதேயாகும்.

மேலை நாட்டவர் இந்நாட்டிற்கு வந்து, வரலாற்று உண்மைகளைத் திரட்ட ஆரம்பித்த பிறகுதான், இந்தத் துணைக்கண்டத்தின் வரலாறு, சிதைந்த அளவுக்காவது உருவெடுக்கத் தொடங்கியது. மேலை நாட்டு ஆராய்ச்சிவல்லுநர்கள் பெரும்பான்மையோரும், நடுநிலை நின்றே வரலாறு தொகுக்க முற்பட்டனர் என்றாலும், அவர்களுக்குத் தக்க உதவியளிப்பவராகக் காட்சியளித்தவர் இந்நாட்டின் ஆதிக்க வகுப்பினராகவே இருந்ததால், வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவிடத்து மிகப் படுத்தப்பட்டும், சிற்சிலவிடங்களில் மாற்றப்பட்டும், திரித்தப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் போய்விட்டன. இவ்வாறு இந்திய வரலாற்று நிகழ்ச்சிகள் முழுவதும் சரியானபடி பதிப்பிக்கப்படவில்லை என்பது மட்டுமல்லாமல், திராவிடத்தின் வரலாறு பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுவிட்டே போய்விட்டன. வரலாற்றாசிரியர்கள் ஆரியக் கலாசாரத்தை ஆராய்ந்த அளவுக்குத் திராவிடக் கலாசாரத்தை ஆராய மறந்தனர்-மறுத்தனர் என்றே கூறவேண்டும்.

ஒரு நாட்டின் வரலாறு, இறந்த கால நடவடிக்கைகளை அந்நாட்டின் மக்கள் முன் கொண்டு வந்து நிறுத்தி, நிகழ்கால நடவடிக்கைகளோடு ஒட்டிப் பார்க்கச் செய்து வருங் காலத்தை வகுப்பதற்கு ஏற்ற வழி வகைப் பதாக அமைய வேண்டும். ஒரு நாட்டின் வரலாறு, மற்ற நாடுகளின் வரலாற்றோடு ஒப்பிட்டு உயர் வழிவகைகளைத் தேடிக்கொண்டு, நல்ல எதிர்காலத்தை வகுத்துக்கொள்வதற்கு ஏற்றதாகவும் அமைய வேண்டும். வரலாற்றறிவின் மூலம் கிடைக்கும் பெருமித உணர்வுதான் ஒரு நாட்டை உன்னத நிலையில் கொண்டு போய்ச் சேர்க்கப் போதுமானதாக இருப்பதாகும். திராவிடத்தில் அதன் வரலாற்றுணர்ச்சி அழிக்கப்பட்டது. எனவேதான் வந்தவர்களெல்லாம் சுரண்டவும் ஆதிக்கம் செலுத்தவுமான நிலை ஏற்பட்டது. தன் மதிப்பு அற்றுவிடவே, சகவாழ்வும் அற்றுவிடும்படியான நிலைமை இயல்பாகவே ஏற்பட்டு விடுகிறது. இதை நன்கு அறிந்து கொள்ளத் தலைப்பட்ட பிறகு தான் தமிழாராய்ச்சி அறிஞர்களெல்லாம், தமிழகத்தின், அதாவது திராவிடத்தின் வரலாறு தனியாக எழுதப்பட வேண்டும் என்றும், அத்துணை அளவு அரும்பெருஞ் சிறப்புகள், வரலாற்று ஏட்டில் இடம் பெறாமல் தமிழ் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும், சிற்பங்களிலும், சிலைகளிலும், பழம் பெரும் நகரங்களிலும், பழமைப் பண்டங்களிலும், மக்கள் பண்பிலும் பழக்க வழக்கத்திலும் புதைந்து கிடக்கின்றன என்றும் உறுதியிட்டுக் கூறுவாராயினர். சில ஆண்டுகளுக்குமுன் மதுரைத் தமிழ்க்கழக மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போது கூட, தோழர் ஸர். கே. சண்முகம் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு வைகை ஆற்றங்கரையிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறார். இந்தியத் துணைக் கண்டத்து வரலாறாயினும் சரி, திராவிடத்தின் வரலாறாயினும் சரி, அது துவக்கப்பட வேண்டிய இடம் வைகைக் கரையே யல்லாது, கங்கைக் கரை அல்ல என்பதை மேலை நாட்டாசிரியர்கள் பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

சமஸ்கிருதத்தை ஆராய்வதிலேயே தம் பல ஆண்டுகளையும் செலவிட்டு, அதன் உயர்வையே சிறப்பாகக் கொண்டிருந்த மாக்ஸ்முல்லர் என்ற ஜெர்மன் அறிஞர், தம் இறுதிக் காலத்தில் தமிழ் மொழியை ஆராயத் தொடங்கும்போது, ஒரு தலைசிறந்த நாகரிகத்தை அதுநாள் வரையில் காணாமலிருந்ததற்காக வருந்தியும், தமிழ் நாகரிகம் முழுவதையும் காணும்போது தம் முன்னைய கருத்தையெல்லாம் மாற்றிக் கொள்ள வேண்டி நேரிடுகிறது என்று கூறினாராம். அது போலவே அங்கொன்றும் இங்கொன்றுமாக ஜி. யு. போப், கால்டுவெல், ஜெப்பர்சன், சிரையர்சன், ஸிலேட்டர், டாப்லி போன்ற மேனாட்டவர் தமிழ்-திராவிட நாகரிகத்தின் மிக உயர்வான சிறப்பைச் சுட்டிக் காட்டியுள்ளனர். ஆனால் திராவிட மக்கள் அதை முற்றத் தாமே உணர்ந்து பெருமித உணர்வு கொள்ளும் நிலையில்லை. காரணம் திராவிடத்தின் வரலாறு சரியாக இன்னமும் எழுதப்படாததே!

இந்திய வரலாற்றுக் காங்கிரசுக்குத் தலைமை வகித்த அலகாபாத் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர், டாக்டர் ராம் பிரசாத் திரிபாதி தமது தலைமையுரையில் "பரந்த மனப்பான்மை, தற்கால ஆராய்ச்சியில் மேன்மை பெறுவது, சரித்திர பூர்வமாகச் சிந்தனை செய்யும் கலையிலேயாகும்" என்று குறிப்பிட்டுள்ளார். அந்த அடிப்படையில் ஒவ்வொரு நாடும் சிந்திக்கத் தொடங்கிவிட்டது; அதனாலேயே அவை சிறந்து வாழுகின்றன; அதுபோல திராவிடமும், தன் முன்னைய வரலாற்றை யுணர்ந்து, உலகியல் சூழ்நிலையோடு தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்து, எதிர்காலத்தைத் தனக்கும் தன் சூழ்நிலைக்கும் ஏற்றபடி அமைத்துக்கொள்ள முற்பட்டுவிட்டால், நிச்சயம், திராவிடம் உலக அரங்கில உயர்ந்த தக்கதொரு இடம் பெற்று விளங்கும். அந்த நிலையை அடைய மக்கள் வரலாற்றுணர்ச்சி பெற வேண்டும். வரலாற்றுணர்ச்சியை மக்களுக்கு ஊட்ட, திராவிட இன உணர்ச்சி கொண்ட வரலாற்றுப் பேராசிரியர்களும், அறிஞர்களும், மாணவர்களும், திராவிடத்திற்கோர் தனி வரலாறு காண முயலவேண்டும். அந்த வரலாறு திராவிடத்தின் அரசியல் வாழ்வு—போர் முறைகள்—வெற்றிகள்—பண்பு—பழக்கவழக்கம்—உயரிய கொள்கை-கோட்பாடு ஆகியவை உணர்த்துவனவாக இருக்க வேண்டும். எனவே தான் அத்தகைய வரலாற்றுச் செம்மல்களை அன்போடு அழைத்து ஆசையோடு கூறுகிறோம் "வரைக வரலாறு" என்று.

அறிவுக் கதிர்!

ஓசையுள்ள கல்லைநீ
யுடைத்திரண்டாய் செய்குமே
வாசலிற் பதித்தகல்லை
மயங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்தகல்லை
பூவும்நீரும் சாத்துறீர்
ஈசனுக் குகந்தகல் [illegible]
லெந்தக்கல் சொல்லுமே!
கோயில் பள்ளியேதடா
குனிந்துநின்ற தேதடா
வாயினால் தொழுதுநின்ற
மந்திரங்க ளேதடா!

—சிவ வாக்கியர்

விமான நிலையங்களில் ராடார் சாதனம்

டமாஸ்கஸ், டிச. 29

ஸிரியாவைச் சேர்ந்த மூன்று விமான நிலையங்களில் ராடார் சாதனத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அல்லல்களுக்குக் காரணம் பெருகும் மக்கள் தொகையே

:0:

நாடு நலம்பெற கர்ப்பத்தடை அவசியம்

(0)

அ. இ. மருத்துவ மாநாட்டில் ஐ. மா. சுகாதார அமைச்சரின் பேச்சு

"இந்தியாவின் ஜனத்தொகையில் முக்கால் பாகத்திற்கு மேல் போஷாக்குக் குறைவினால் அவஸ்தைப் படுகிறவர்களின் எண்ணிக்கையாகும்.

குறைந்த செலவில் போதிய அளவுள்ள எல்லாபோஷாக்குள்ள உணவுத்திட்டத்தை வகுத்துக் கொடுக்க வேண்டியது டாக்டர்களின் பொறுப்பாகும்

இரண்டாவது பிரச்னை ஜனத்தொகை அதிகரித்து வருவதாகும். இதற்குக் கர்ப்பத்தடை பிரசாரம் தீவிரமாக நடைபெற்றாக வேண்டும். கிராமாந்தரங்களில் கர்ப்பத்தடை ஆஸ்பத்திரிகள் இருக்கவேண்டுவது மிகவும் முக்கியமானது. மலிவான விலையில்கர்ப்பத்தடைவசதிகள் கிடைக்கும்படி செய்ய வேண்டும்"

இவை 96வது அகில இந்திய வைத்திய மாநாட்டில், ஐக்கிய மாகாண சுகாதார மந்திரியார் தோழர் ஸி. பி. குப்தா வெளியிட்ட கருத்துக்களாகும்.

இந்நாட்டில் ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆனால், அதற்கேற்ப வாழ்க்கை வசதிகள் பெருகவில்லை. இதனால் நாட்டில் ஏழ்மையும், பிணியும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இதற்கு விரைவில் ஒரு முடிவு காண வேண்டும். இன்றேல் நாடு மேலும் [illegible] வறுமை, நோய், இளமையில் மரணம் முதலியவை பெருகுவதற்குக் காரணம், ஜனத்தொகைக்கு ஏற்ற அளவு போஷாக்குள்ள உணவு இல்லாமையேயாகும். இதைத்தான் ஐ. மா. சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டி, குறைந்த விலையில் சத்துள்ள உணவுப்பொருள் தயாரிப்புக்கு உதவிசெய்யுமாறு மருத்துவர்களை அழைக்கிறார். ஆம்; இது மிகமிக அவசியமான வேண்டுகோளாகும். மேனாடுகளில் இத்தகைய முறையில் மருத்துவர்கள் சேவை செய்துவருகிறார்கள். [illegible] நம்மவர்களுக்குக் கூட பயன்படுமாறு செய்யப்படுகிறது, [illegible] விஞ்ஞானத்தின் [illegible] செல்வர்களின் தனியுடைமையாக இருந்து வருகிறது இந்நிலை மாறவேண்டும்.

அடுத்த படியாக தோழர் குப்தா கர்ப்பத்தடையை வலியுறுத்தியிருப்பதும் கவனிக்க வேண்டியதே. ஜனத்தொகைக்கு ஏற்றவாறு வசதிகளைப் பெருக்க முடியாவிட்டாலும், வசதிக்கு ஏற்றவாறு ஜனத்தொகையை [illegible] வேண்டும். இதற்கு அமைச்சர் கூறியபடி கர்ப்பத்தடை பிரசாரமும், கர்ப்பத்தடைக்கு வேண்டிய சாதனங்களும் [illegible] மூலை முடுக்கெல்லாம் [illegible] வேண்டும். பாவம்! ஏழை கிராம மக்கள் பல குழந்தைகளைப் பெற்றெடுத்து விட்டு, [illegible] காக்கவும், வழியின்றி, கல்வியூட்ட மாட்டாமல் தவிக்கின்றனர். பிள்ளைப்பேறு என்பது ஆண்டவன் அருள்! அதனை [illegible] மாற்ற இயலாது [illegible] பிழைக்க வழிகாட்டமாட்டார்; [illegible] வைத்தவன் தண்ணீர் வார்க்கமாட்டானா? எல்லாம் 'அவன்' செயல் என்றெல்லாம் பேசி [illegible] விடுகின்றனர். அதேபோல் சிசு மரணம், வறுமை, நோய் முதலிய அனைத்திற்கும் ஆண்டவன் சோதனை என்று சொல்லி விடுகின்றனர். இவ்வளவு எல்லா விதத்திலும் ஆண்டவன் மேற்சுமையைப் போட்டுவிட்டு, அல்லற்படும் மக்களை அறியாமையின் பிடியினின்று மீட்க வேண்டுமானால் கர்ப்பத் தடையின் அவசியம் வலியுறுத்தப் படவேண்டியது மிகமிக இன்றியமையாதது.

சிலர் கர்ப்பத்தடை குற்றமுள்ளது எனக் கருதுகின்றனர். இவர்கள் தம் கருத்தை [illegible] கர்ப்பத்தடை குற்றமுடைத்தல்ல. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறியிருப்பது போல், "சாதலுக்கோ பிள்ளை, தவிப்பதுக்கோ பிள்ளை சந்தான முறை நன்று, தவிர்க்கும் முறை தீதோ?"

சோஷலிஸ்டு கட்சியின் தேர்தல் திட்டம்

புதுடில்லி, டிச. 29—

சோஷலிஸ்டு கட்சியின் மாகாண கமிட்டி காரியதரிசிகள், மாகாண தேர்தல் கமிட்டி தலைவர்கள் இவர்கள் கொண்ட கூட்டம் புதுடில்லியில் 30, 31 தேதிகளில் நடைபெறவிருக்கிறது. இம் மாநாடு தோழர் ஜயபிரகாஷ் தலைமையில் நடைபெறும். மாகாணங்களில் கட்சியைத் திருத்தியமைப்பது பொதுத் தேர்தல்களில் போட்டியிடுவது முதலியவைபற்றி இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படும். இடது சாரி கட்சிகளுடன் ஒரு நடைமுறை உடன்பாட்டிற்கு வந்து உபதேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் இவைகளில் போட்டியிடுவது குறித்தும் இம்மாநாடு முடிவு செய்யலாம் என்று சோஷலிஸ்டு வட்டாரங்களில் கூறப்படுகிறது. ([illegible])

எஃகு ரயில்வே கோச்சுகள்

ரயில் வண்டிகளுக்கு தேவையான, எல்லாம் எஃகினாலமைந்த கோச்சுகளைக் கட்டுவது எவ்வளவு தூரம் சாத்தியமென்பதை ரயில்வே போர்டார் ஆலோசித்து வருகின்றனராம். இதனால் வண்டிகள் லேசாகும், இது சாதாரணமாக அதிகமான வண்டிகள் இணைக்கப் பெற்று நிறைந்த பிரயாணிகள் ஏற்றிச் செல்ல வாய்ப்பேற்படும். இந்த கோச்சுகள் இந்நாட்டிலேயே கட்டப்படுமென்றும் கூறப்படுகிறது.

மத்திய டிராக்டர் ஸ்தாபனத்தின் நிலமீட்சி வேலை

டிராக்டர் திட்டம் பற்றி குறை கூறுபவர்களுக்கு சமாதானம்!

சர்க்கார் டிராக்டர் திட்டங்கள் பற்றி சமீபத்தில் பத்திரிகைகளில் கூறப்பட்டிருந்த சில அபிப்பிராயங்கள் உண்மை நிலைமையை சரிவர உணராமல் எழுதப்பட்டவையே யாகுமென்று மத்திய விவசாய மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் இன்று தெளிவுபடுத்தினர். அவர் கூறியதாவது: இப்பொழுது மத்திய டிராக்டர் ஸ்தாபனத்திலிருக்கும் மொத்தம் 254 டிராக்டர்களில் 221 டிராக்டர்கள் ராணுவப் பைசல் சாமான்களிலிருந்து வாங்கப்பட்ட பழைய யந்திரங்களாகும். இந்த யந்திரங்கள், மத்திய டிராக்டர் ஸ்தாபனத்தால் வாங்கப்படுவதற்கு முன்னால் சுமார் 5 வருஷங்கள் உழைத்திருக்கின்றன. வாங்கும்போது மிகவும் பழுதடைந்த நிலைமையிலிருந்தன. இதற்கெனப் பிரத்தியேகமாக டில்லியில் அமைக்கப்பட்ட பட்டறையொன்றில் இவை பழுது பார்த்துச் சீர்திருத்தப்பட்டன. 1949 ஜனவரியிலிருந்து மே மாதத்துக்குள் 88,000 ஏகரா நிலத்தை மீட்டுப் பண்படுத்தவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த ஐந்து மாதகாலத்தில் மொத்தம் 74,022 ஏகரா நிலம் மீட்கப்பட்டுவிட்டது. அதாவது லட்சிய அளவாகச் சொல்லப்பட்டிருந்ததில் சுமார் 84 சதவிகிதம் நிலம் திருத்திப் பண்படுத்தப்பட்டுவிட்டது. டிராக்டர் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்வதாக வைத்துக்கொண்டு கணக்கிட்டால் நாளொன்றுக்கு சராசரி 3½ ஏகரா வீதம் நிலமீட்சி வேலை நடைபெற்றிருக்கிறது. இந்த வேலைக்கு உபயோகிக்கப்பட்ட எல்லா டிராக்டர்களும் மிகப் பழயவையென்பதைக் கவனிக்கும்போது, இவைகள் செய்துள்ள வேலை பெரிதும் திருப்திகரமளிப்பதாகவே சொல்ல வேண்டுமென்று, அமெரிக்காவில் புதிய டிராக்டர்கள் வாங்குவதற்கு கடன் உதவி கோரி இந்திய சர்க்கார் விண்ணப்பம் செய்துகொண்டிருப்பதையொட்டி, இந்தியாவுக்கு வருகை தந்த சர்வதேச பாங்க் வல்லுனர்களே கூறியிருக்கின்றனர்.

அந்த அதிகாரி மேலும் கூறியதாவது:—மத்திய டிராக்டர் ஸ்தாபனமானது நிலமீட்சி வேலையை மாத்திரமே, அதாவது மரம், செடிகளும், புல்புதர்களும் மண்டிக் கிடக்கும் நிலங்களைத் திருத்திப் பண்படுத்தும் வேலையை மாத்திரமே கவனித்து வருகிறது. ஆனால் மாகாண டிராக்டர் ஸ்தாபனங்களோ, சிறு அளவில் நிலமீட்சி வேலையையும் செய்து வந்தபோதிலும், யந்திர விவசாய வேலைகளையே பிரதானமாகக் கவனித்து வருகின்றன. மாகாணங்களுக்குச் சொந்தமான டிராக்டர்களை மாகாண சர்க்கார்களே உபயோகித்து வருகின்றன. இந்த டிராக்டர்களின் வேலைகளை மத்திய சர்க்கார் மேற்பார்வையிடுவது கிடையாது.

1,812 டிராக்டர்களின் மொத்த விலை 2,53,20,985 ரூபாய் என்று சென்றவாரம் பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது. இதை ஆதாரமாகக் கொண்டு ஒரு ஏகரா நிலத்தை உழுவதற்கு 75 ரூபாய் செலவாவதாகச் சிலர் கணக்கிட்டிருக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட வருஷத்தில் டிராக்டர்கள் வாங்குவதற்குச் செலவிடப்பட்ட மூலதனத்தை அவ்வருஷத்தில் நிலமீட்சி வேலைக்குச் செலவிடப்பட்ட தொகையாகக் கொண்டு, ஒரு ஏகரா உழுவதற்காகும் சராசரி செலவைக் கணக்கிடுவது சரியல்ல என்று இந்த அதிகாரி சுட்டிக் காட்டினர். ஒரு டிராக்டரின் சராசரி ஆயுட்காலம், அது சரிவரப் பராமரிக்கப்பட்டு வந்தால், சுமார் 10,000 மணி நேரம். ஆகவே ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்வதாகவும், ஆண்டில் 120 நாட்கள் வேலை செய்வதாகவும் வைத்துக்கொண்டால் ஒரு டிராக்டர் சாதாரணமாக சுமார் பத்து ஆண்டு உழைக்கக் கூடும். ஒரு ஏகரா நிலத்தை உழுவதற்காகும் சராசரிச் செலவைக் கணக்கிடும்போது, டிராக்டரின் மூலதனச் செலவை அதன் ஆயுட்காலம் முழுவதுக்குமாகச் சமமாகப் பகிர்ந்து, டிராக்டரை இயக்குவதற்காகும் செலவையும், யந்திரத்தின் தேய்மானத்தையும் ஆதாரமாகக் கொண்டே கணக்கிட வேண்டும். இந்த அடிப்படையில் கணக்கிடும்போது, மத்திய டிராக்டர் ஸ்தாபனம் மேற்கொண்ட நிலமீட்சி வேலைச் செலவு ஏகராவுக்கு சுமார் 40 ரூபாயாகிறது. யந்திர சாதன விவசாயத்துக்காகும் செலவு, மாகாணத்துக்கு மாகாணம் ஆங்காங்குள்ள நிலப்பாங்குக்கேற்ப ஏகராவுக்கு 11 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரை வித்தியாசமாக இருக்கிறது.

மத்திய டிராக்டர் ஸ்தாபனம் டிராக்டர்களைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய வசதிகள் கொண்ட பட்டறையொன்றை டில்லியில் அமைத்திருக்கிறது. இனிமேல் நிலமீட்சி வேலை பெரும்பாலும் மத்திய இந்தியாவிலேயே நடைபெறவிருப்பதால், போபாலில் மற்றொரு பெரிய பட்டறை அமைக்கப்பட்டு வருகிறது. மத்திய டிராக்டர் ஸ்தாபனத்துக்குச் சொந்தமான டிராக்டர்கள், ஒவ்வொன்றிலும் 15 டிராக்டர்கள் கொண்ட பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. டிராக்டர்களில் அவ்வப்பொழுது ஏற்படக்கூடிய சில்லரை வேலைகளை ஸ்தலத்திலேயே கவனித்து யந்திரங்களைச் சீர்படுத்துவதற்கு வசதியாக ஒவ்வொரு யூனிட்டுடனும் இடம் பெயரும் பட்டறை யொன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் புதிய டிராக்டர்களுடன்கூட அவற்றின் விலையில் நாலில் ஒரு பங்கு மதிப்புக்கு உதிரி பாகங்களும் வரவழைக்கப்படுகின்றன. புதிய டிராக்டர்கள் வாங்குவதற்காக கோரப்பட்டிருந்த கடன் தொகையை அனுமதிப்பதற்கு முன்னால் சர்வதேச பாங்கின் பிரதிநிதிகள், இந்தத் திட்டம் முழுவதையும் நன்கு பரிசீலனை செய்து, டிராக்டர்களைப் பராமரிப்பதற்கும், பழுதுபார்ப்பதற்கும் இந்த ஏற்பாடுகள் போதுமானவை என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர்.

பார்லிமெண்டில், டிராக்டர்களின் எண்ணிக்கை 1,538 என்று கூறப்பட்டது. இந்தியாவிலுள்ள டிராக்டர்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லையென்றும், மத்திய மாகாண சர்க்கார்களின் விவசாய இலாகாக்களுக்குச் சொந்தமான டிராக்டர்களின் எண்ணிக்கையையே குறிப்பிடுவதாகவும் அந்த அதிகாரி கூறினர். விவசாய மந்திரி காரியாலயம் கூறும் தகவல்களின்படி, பழுதடைந்துபோன டிராக்டர்களின் எண்ணிக்கை 269 ஆகும். இந்த டிராக்டர்கள், பார்லிமெண்டில் இதுபற்றிய தகவல் கூறப்பட்ட சமயத்தில் உபயோகிக்க முடியாத நிலைமையில் இருந்தவையேயொழிய ஆண்டு முழுவதிலுமே இவை பழுதடைந்து கிடந்ததாகச் சொல்லக் கூடாது. இந்த வருஷத்தில் டிராக்டர்கள் கொண்டு உழப்பட்ட நிலத்தின் மொத்த விஸ்தீரணம், 8,77,184 ஏகராவாகும். மொத்தம் 2,32,437 ஏகரா நிலமே உழப்பட்டிருப்பதாகச் சில பத்திரிகைகளில் கூறப்பட்டிருப்பது சரியல்ல. ஒவ்வொரு டிராக்டரும் ஒரு ஆண்டில் உழுதுள்ள நிலத்தின் பரப்பு 249 ஏகரா என்றும், 263 ஏகரா என்றும் கூறப்படுவதும் தவறான கணக்காகும். கணக்குப்படி இது 351 ஆக இருக்க வேண்டும். ஒரு டிராக்டர் வருஷம் 365 நாளும் வேலைசெய்ய முடியுமென்று தவறான எண்ணத்திலேயே இவ்வாறு கணக்கிடப்பட்டிருக்கிறது. விவசாய வேலைகள் பருவ காலங்களில் நடைபெறும் வேலைகளேயொழிய, ஆண்டு முழுவதிலும் நடைபெறக்கூடியவையல்ல என்பதை இவர்கள் மறந்து விட்டார்கள் போலும் என்று அந்த அதிகாரி சுட்டிக் காட்டினர். சீதோஷ்ண நிலைமையைப் பொறுத்து ஆண்டொன்றுக்கு 110 முதல் 130 நாள் வரை தான் வேலை செய்ய முடியும்.

டர்பன் முனிசிபல் கவுன்சில்

போக்குக்கு: இந்தியர் கண்டனம்

டர்பன், டிச. 29—

இந்தியர்கள் எவ்வளவோ எதிர்த்தும்கூட கேடோ மேனர் என்ற இடத்தை ஸ்வீகரித்து தென்னாப்பிரிக்க சுதேசிகளுக்கு வீடு கட்டித்தருவது என்று இரண்டு வோட் வித்தியாசத்தில் டர்பன் முனிசிபல் கௌன்ஸில் முடிவு செய்திருக்கிறது.

இப்பொழுது கேடோ மேனர் குடியிருப்பில் 67000 ஆப்பிரிக்கர்களும், மற்றும் ஏராளமான இந்தியர்களும் வசித்து வருகிறார்கள். இதைத் தவிர்த்து 4500 சுதேசித் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்ள அனுமதிப்பதென்று இப்பொழுது டர்பன் கௌன்ஸில் முடிவு செய்திருக்கிறது.

இதை இந்தியர்களின் ஸ்தாபனங்கள் தீவிரமாக எதிர்த்திருந்தன. அவர்கள் கூறியிருந்ததாவது:—ஆப்பிரிக்கர்களுக்காக வீடு கட்டிக்கொடுக்க முனிசிபல் கௌன்ஸில் முன்வந்திருப்பது பற்றி மிகவும் சந்தோஷம். ஆனால் எங்கள் இடங்களைப் பிடுங்கிக்கொள்வதையே நாங்கள் ஆட்சேபிக்கிறோம். எடுத்துக்கொள்ளும் நிலங்களிலுள்ளவர்களுக்கு வேறு இடங்களில் குடியிருக்க வசதிசெய்து தரவேண்டும் என்று முனிசிபல் கவுன்ஸில். முன்பு கூட இந்தியர் வசித்திருப்பதை ஞாபகப்படுத்துகிறோம். கூட்டங்கள் சட்டத்தின்படி இப்போது நிலம் வாங்க முடியாமல் கஷ்டப்படும் நிலைமையில் இருக்க இடமின்றி அவர்களை வெளியேற்றுவது அநியாயமாகும்.

3,76,000 ஜப்பானிய கைதிகள் கதி

ரஷ்யாவை யு. எஸ். தகவல் கேட்கும்

லண்டன், டிச. 29—

இதுவரை எதுவுமே தகவல் வராத 376000 ஜப்பானிய கைதிகளின் கதி என்னவாயிற்றென்று ரஷ்யாவை யுனைட்டெட் ஸ்டேட்ஸ் கேட்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாஷிங்டனின் இக்குறிப்புக்கு ரஷ்யாவிடமிருந்து பதில் வரவில்லை என்றால், மக்ஆர்தர் கூறிய யோசனைப்படி ஸ்விட்ஸர்லாந்து அல்லது செஞ்சிலுவை ஸ்தாபனம் இவைபோன்ற நடுநிலைமை நாடு அல்லது ஸ்தாபனத்தைக் கொண்டு விசாரிக்கப்படலாம் என்று தெரிய வருகிறது.

நிறவெறிக் கொள்கை மலான் ஆட்சி சரிந்துவிடுமோவென அனுதாபக் கண்ணீர்!

வாரிசு யாரென்பதில் வேறு தகராறு!

லண்டன், டிச. 29—

தென்னாப்பிரிக்கப் பிரதம மந்திரி பதவியிலிருந்து விலகிவிட மலான் விரும்புவதாகவும், அவர் விலகினால் கட்சியின் பலம் போய்விடும் என்று அவருடைய சகாக்கள் இன்னும் சிறிது காலம் பதவியிலிருக்கும்படி கேட்டுக்கொண்டிருப்பதாகவும் இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

மலான் உடல் நலிவுமிகவுற்றிருக்கிறாராம். தான் பதவியிலிருந்து விலகினால், தன் கட்சி நிலைமை அதோகதியாகிவிடும் என்பதும் மலானுக்குத் தெரியும். மலான் வேறு வழியின்றி விலகும்படி நேரிட்டால், அவர் பதவிக்கு வரக் கூடியவர்கள் என்று நால்வர் பேர் கூறப்படுகிறது. இப்பொழுது அவர் மந்திரிகளாக உள்ள ஸ்டிரைடம், டோங்கெஸ், ஜான்ஸென், ஹாவெங்கா இவர்களில் ஒருவர் பிரதமராக வரலாம்.

இவர்களைப்பற்றி 'மாஞ்செஸ்டர் கார்டியன்' கேப்டவுன் நிருபர் எழுதியிருப்பதாவது; ஸ்டிரைடம் தீவிரவாதி. ஆப்பிக்கானீர் கட்சியின் ஆதரவைஅவர் பெறுவாரா என்பதே சந்தேகம். டோங்கஜஸ்சும்அவர்கட்சியினுல் பிரதமராக விருப்பம்படுவார் என்று தெரியவில்லை. ஜான்சென் நடுநிலைமைக்காரர் என்ருலும் அவர் பெயரிலோ, ஆளைப் பார்த்தாலோ மதிப்பைப் பெறக்கூடியவர் என்று தெரியவில்லை. ஹாவெங்காவின் கட்சிக்குப் போதிய பலம் இல்லை என்ருலும், பதவிகிடைக்கும் என்பதற்காக அவர் கட்சி,தேசீயக் கட்சியுடன் சேர்ந்து ஒத்துழைக்கலாம். இவர்களில் யார் பதவிக்கு வரக்கூடியவர்கள் என்பது 1950ல் தெளிவாகிவிடும்.

600 டிராம் கண்டக்டர்கள் "டிஸ்மிஸ்"

ஹாங்காங், டிச. 29—

ஹாங்காங்கில் டிராம் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை என்பதற்காக பிரயாணிகளிடமிருந்து டிக்கெட் வாங்காதிருப்பது என்ற புதுமாதிரி ஸ்டிரைக்கை ஆரம்பித்து நடத்திவருகின்றனர். இதைத்தொடர்ந்து ஹாங்காங் டிராம்வே கம்பெனி 600 கண்டக்டர்களை 'டிஸ்மிஸ்' செய்திருக்கிறது.

டிரைவர்களும் காவலி கூலிகளும் வேலைக்குப் புதிதாக ஒரு வாரத்திற்குள் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்று உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

இப்பொழுது டிராம்கள் ஓடுவது அடியோடு நிறுத்தப்பட்டுவிட்டது.

புது கண்டக்டர்களை வேலைக்கமர்த்தி அவர்களுக்குப் பயிற்சி அளித்து டிராம்சர்வீசை ஒழுங்காக நடத்த பல வாரங்கள் பிடிக்கும். இந்த ஸ்டிரைக்கைத் தொடர்ந்து அனுதாப ஸ்டிரைக்குகள் ஆரம்பமாகலாம் என்று தெரிகிறது.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மதுவிலக்கும் டெலிவிஷனும்

நியூயார்க், டிச. 29—

அடுத்த 5 ஆண்டுகளில் 24,000,000 டெலிவிஷன் செட்டுகளை அமெரிக்கர்களிடையே விற்றுவிட முடியும் என்று, டெலிவிஷன் விற்பனை ஏஜெண்டுகள் கூறுகின்றனர்.

இதுவரை 8000 'குடிக்கும்' இடங்களில் டெலிவிஷன் செட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் வியாபாரம் 33% அதிகரித்திருக்கிறதாம். யு. எஸ். மதுவிலக்கு அமுல் நடத்துவதற்கு, டெலிவிஷன் பெரும் இடைஞ்சலாக இருந்துவரும் என்றே தெரிகிறது. —குளோப்.

லங்காஷயர்-எகிப்து போட்டி

லண்டன், டிச. 29—

உலகப் பருத்தி வியாபாரத்தில் லங்காஷயருக்குப் போட்டியாக எகிப்து தலையெடுத்து வருகிறது. எகிப்து சமீபகாலமாக பருத்தி ஜவுளிகளையும், நூல்களையும் இறக்குமதி செய்வதை அடியோடு நிறுத்திவிட்டது. போர் மூண்டது முதல் எகிப்து கடைப்பிடித்து வரும் கொள்கையால் பருத்தி உற்பத்தி ஏராளமாக அதிகரித்திருக்கிறது.

நைஸாம் இயற்றிய பாரசீகக் கவிதைகள்

லண்டன், டிச. 29—

ஐதராபாத் நைஸாம் தன் பாரசீகக் கவிதைகளை இங்கிலீஷில் மொழிபெயர்த்து வெளியிடவிருக்கிறார். புத்தாண்டு ஆரம்பத்தில் இது தயாராகிவிடும் என்று தெரிகிறது.

கிருஸ்துமஸ் விழாவை ஒட்டி ஏசுநாதருக்காக அர்ப்பணம் செய்யப்பட்ட ஒரு கவிதையும் இதில் இடம் பெற்றிருக்கிறதாம்.

சென்னை மாகாண கூட்டுறவு மாநாடு

சென்னை, டிச. 29—

சென்னைப் பிரதமர் தோழர் பி. எஸ். குமாரசாமிராஜா 27-வது சென்னை மாகாண கூட்டுறவு மாநாட்டை டிசம்பர் 31-ம் தேதியன்று திறந்து வைப்பார். இம்மாநாடு சென்னை மாகாண கூட்டுறவு யூனியன் ஆதரவின் கீழ், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. அரசியமைப்புத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத், ஜனவரி 1-ந் தேதியன்று மாலை 4 மணிக்கு சொற்பொழிவாற்றுவார்.

ஸிரிய விமான சர்வீஸ்களை சர்க்காரே ஏற்றுநடத்தும்

டமாஸ்கஸ், டிச 29—

ஸிரிய சர்க்கார் விமான சர்வீஸ்களை தாங்களே ஏற்று நடத்த முன்வரும் என்று தெரிகிறது. இது விஷயமான ஒரு திட்டம் ஸிரிய மந்திரிசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

எஸ்.எஸ்.எல்.சி. படிப்புக்கு ஏற்றம் தருக

அறிவாற்றல் மிக்க மாணவர்களைத் தயார் செய்வதே அரசியலார் கடன்

தலைமையாசிரியர்கள் மாநாட்டில் தோழர் குருவில்லா ஜேகப் கருத்துரை

எஸ். எஸ். எல். சி படிப்பின் தரம் இப்பொழுது மிகவும் குறைந்து விட்டது. பாஸ் செய்யும் சதவிகிதம் தரத்தைக்குறிக்கவில்லை. மார்க்குகளை அதிகமாகத்தரும்படி பிரதம பரிசோதகர்களும், பிறகு பாஸ் செய்வோரின் விகிதாசாரத்தை உயர்த்த மாடரேஷன் போர்டாரும் பின்பற்றும் உபாயங்கள் எல்லோரும் அறிந்தவையே, இந்தத் தரக்குறைவு நிலை மாற வேண்டும்; இதற்குத் துணிவுடன் பரிகாரம் தேடவேண்டும்.

என்று சென்னையில் கூடிய தலைமையாசிரியர்கள் மாநாட்டில் தோழர் குருவில்லா ஜேக்கப் தனது தலைமையுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

எஸ். எஸ். எல். சி. மாணவர் தரத்தைப்பற்றி தோழர் ஜேக்கப் கூறியிருப்பது கவனிக்க வேண்டிய விஷயமே. சாதாரணமாக எஸ். எஸ். எல். சி. பரீட்சை என்பது, மாணவர் பதினொரு ஆண்டுகள் படித்த பின்பு செய்யப்படும் ஒரு பரிசோதனையாகும். பதினொரு ஆண்டுகளில் ஒரு மாணவன் பெற வேண்டிய கல்வி அறிவும் பொது அறிவும் சராசரியாக மனித வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படை அறிவாகும். ஆனால் இன்றைய நிலையிலே எஸ்.எஸ். எல். சி. படித்த மாணவர்களிடைய அத்தகைய அறிவை எதிர்பார்க்க முடியவில்லை. அதிலும் கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளாக எஸ். எஸ். எல். சி. தேர்வு என்பது சர்வ சாதாரணமாகக் காணப்படுகிறது. பரீட்சையில் தேறிய மாணவர்களிடையே பக்குவத்தைக் காண முடியவில்லை. அதிலும் நமது காருண்யமுள்ள காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து அந்நியமொழி என்பதற்காக ஆங்கிலத்தை ஒழிக்கும் பணி துரிதமாக நடைபெற்றுவரும் காரணத்தால் மாணவர்களுடைய பொது அறிவே பாழாக்கப்பட்டு வருகிறது. பரீட்சையில் தேர்ச்சி பெறும் மாணவர் தொகை அதிகரிக்கிறதேயன்றி, திறமை அதிகரிக்கவில்லை. சுமார் 10 ஆண்டுகட்கு முன்பு பரீட்சையில் தேறிய மாணவர்களின் தகுதிக்கும் இன்றைய மாணவரின் தகுதிக்கும் பெருத்த அளவில் வேற்றுமை காணப்படுகிறது. இந்த நிலை மாறவேண்டியது மிகமிக இன்றியமையாததாகும்.

இதைத்தான் தோழர் ஜேக்கப் வற்புறுத்திக் கூறியுள்ளார். "துணிவுடன் இதற்குப் பரிகாரம் தேடவேண்டும்" என்கிறார் அவர். தோழர் ஜேக்கப் கூறுவதுபோல் மாணவர் தாம் உயராதவரை தேர்ச்சி பெறுவோர் எண்ணிக்கை உயர்வதில் எத்தகைய பயனுமில்லை.

கல்லூரி படிப்புக்கு ஏராளமான மாணவர்களை அனுப்புவதைவிட, சராசரியாக எஸ். எஸ். எல். சி. படித்த மாணவர்கள் பண்பட்ட அறிவுடையோராய்த் திகழச்செய்வதே வேண்டற்பாலது. இதை விடுத்து பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதால் நாட்டுக்கு என்ன பலன்?

தற்போதைய நிலையிலே இந்நாட்டுக்கு வேண்டப்படுவோர் வெறும் பட்டதாரிகள் மட்டுமல்ல. அறிவாளிகளும் தேவை; எனவே இதனைக் கருத்தில் கொண்டு கல்வித்துறையில் ஆவன செய்ய வேண்டியது அரசியலார் கடன். அதற்குப்படியாக செலக்ஷன் பரீட்சை வேண்டாம் என்கிறார். ஒரு மாணவன் பத்தாண்டு காலம் கல்வி பயின்ற பின் 'செலக்ஷன்' என்னும் ஒரு முறையைக் கொண்டு அவனைப் பரீட்சைக்குச் செல்ல விடாது தடுக்கும் முறை எவ்வகையிலும் பொருத்தமல்ல. பரீட்சைக்குச் செல்லும் தகுதியை இத்தனை பத்தாண்டு காலத்தில் ஒரு மாணவன் பெறவில்லையென்றால் அது யாருடைய குற்றம்? படிப்பு முறையின் குற்றமேயன்றி மாணவனின் குற்றமன்று. எனவே, படிப்படியாக மாணவரைப் பரீட்சைக்கு தயார்செய்ய வேண்டியது ஆசிரியர்கள் கடமை. கீழ்வகுப்புகளில் சரியான அடிப்படை போடாமல் மேல்வகுப்புக்கு மாணவர்களை அனுப்பிவிட்டு, கடைசி நேரத்தில் பரீட்சைக்குத் தகுதியில்லை என்று சொல்லுவது சரியல்ல. இதனால் படிப்பின் மதிப்பு குறைந்து விடுகிறது. ஆகவே எஸ். எஸ். எல். சி. மாணவர்களைப் பொது அறிவு மிக்கோராய்ச் செய்து நாட்டுக்குப் பயன் படுமாறு செய்தல் அரசியலார் கடனாகும்.

கம்யூனிஸ்டு போலீஸ் படைக்கு டாங்கிகள்

லண்டன், டிச. 29—

ரஷ்ய ஜெர்மனியில் கம்யூனிஸ்டு போலீஸ் படைகளின் உபயோகத்திற்காக டாங்கிகளும், கவசமோட்டார்களும் செபனிட்ஸ் தொழிற்சாலைகளிலிருந்து 'ஆர்டர்' செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த போலீஸ் படைகளுக்கு ரஷ்ய இராணுவம் பயிற்சியளித்து வருகிறதாம்.

பிரிட்டன் கட்டும் புதுக் கப்பல்கள்

லண்டன், டிச. 29—

"குவீன்மேரி, குவீன் எலிஸபெத்" இவைகளைவிட பிரம்மாண்டமானதும், மிக வேகமாகச் செல்லக் கூடியதாகவுமுள்ள கப்பல்களை பிரிட்டன் கட்டும் என்று தெரிகிறது.

இக்கப்பல்கள் 1954ல் தான் தயாராகும் என்றும் தெரிகிறது. இனித் தயாராகும் கப்பல்களில் புரட்சிகரமான மாறுதல்கள் அமைக்கப்பட்டிருக்கும் என்றுகூறப்படுகிறது.

ஆல்பேனியா-யூகோ எல்லையில் கைகலப்பு

லண்டன், டிச. 29—

யூகோஸ்லாவியா எல்லையை யொட்டியுள்ள வட ஆல்பேனிய குதியில் ஆல்பேனிய பாதுகாப்புப் படைகளுக்கும், காமின் பார்ம் எதிர்ப்புப் படைகளுக்கும் சண்டை மூண்டதாக ஏதென்ஸிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

கலகப் படைகள் ஒரு நகரைப் பிடித்துக்கொண்டு விட்டதாகவும், ஆனால் பின்னர் ஆல்பேனிய படைகளால் விரட்டப்பட்டதாகவும், அச்செய்தி கூறுகிறது.

டிட்டோ ஆட்களின் நடவடிக்கைகளால், இப்பொழுது ஆல்பேனியாவிலுள்ள சர்க்காருக்குப் பேராபத்து ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. வெர்லாசிஎன்ற யூவேகொரில்லாப் படைத் தலைவர் யூகோஸ்லாவ் மாஸிடோ லாயாவில் தளத்தை அமைத்துக்கொண்டு தாக்க வருவதாகக் கூறப்படுகிறது. கொரில்லாக்களுக்கு எவ்வித உதவியையும் டிட்டோயிஸ்டுகள் தரவில்லை என்று, பெல்கிரேட் செய்திகள் மறுக்கின்றன.

இளங்கோ முத்தமிழ் பயில் மன்றத் தோற்றம்

20—11—49 அன்று தோழர் சிவப்பிரகாசனார் அவர்கள் தலைமையில் 'இளங்கோ முத்தமிழ் பயில் மன்றம்' தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் தோழர் பூபால கிருட்டினன் பி. ஏ. தலைவராகவும், தோழர் ஆபத்சகாயன் துணைத் தலைவராகவும், தோழர் சிவப்பிரகாசனார் பொதுச் செயலாளராகவும், தோழர்கள் பால் வண்ணன், சீனிவாசன் கூட்டுச் செயலாளராகவும், தோழர் நிலவழகன் பொருளாளராகவும், தோழர் சேகரன் விளம்பர உறுப்பினராகவும் தோழர்கள் இராமச்சந்திரன், ச. க. மணி, நாகபூடணம் பக்கிரமன், முதலியோர் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

18—12—49 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்குமேல் நடந்த அங்கத்தினர் பொதுக் கூட்டத்தில் மன்றச் செயற்குழு நிறை வேற்றிய தீர்மானங்களும், சட்ட திட்டங்களும், ஒப்புக் கொள்ளப்பட்டு, மன்றத்திற்குக் கட்டிடம் கட்ட நன்கொடை வசூலிப்பதெனவும் தீர்மானிக்கப் பட்டது. (வி-உ)

லண்டனில் இந்தோனேஷ்யா

அரசுப் பிரதிநிதி காரியாலயம்

லண்டன், டிச. 29—

லண்டனில் இதுவரை இந்தோனேஷ்யாவின் விளம்பர காரியாலயமாக இருந்து வந்த இடம் சீக்கிரம் இந்தோனேஷ்ய அரசு பிரதிநிதி காரியாலயமாக மாறும் என்று தெரிகிறது. இந்த மாற்றத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மலேயா சர்க்காருக்கு இந்தியாவிடமிருந்து குடியரசு ஆரம்ப விழாவிற்கான அழைப்பு எதுவும் இன்னும் வரவில்லை என்று சிங்கப்பூர் சட்டசபையில் ஒரு கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலில் கூறப்பட்டது. அழைப்பு வந்தால் மலேயா பிரதிநிதியை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

கழக நடவடிக்கைகள்

புதுவை:— இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 25—12—49-ல் நடைபெற்றது. தனி அழைப்பின் இணங்கி கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர் க. சிவப்பிரகாசம் அவர்கள் சென்னை மண்டில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவின் புதுவைப் பகுதி உறுப்பினர் கழகப் பணியினைப் பற்றியும், செயற்குழுவினரின் கடமைகள் பற்றியும், அங்கத்தினர் பொறுப்பு பற்றியும், கூட்டத்தலைவர்த்தில் தமது கருத்துரையை வழங்கினர்.

22—1—50-ல் கழகத் துவக்க விழாவையும், பொங்கல் விழாவையும் நடத்த முடிவு செய்யப்பட்டதுடன், இதைப் பற்றி அங்கத்தினரின் கருத்தை அறிய அங்கத்தினர் பொதுக் கூட்டத்தை 1-1-50-ல் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. இதுவரை சேர்ந்துள்ள அங்கத்தினரை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்னும் பல முடிவுகள் காணப்பட்டதுடன் கூட்டம் மாலை 5 மணிக்கு முடிவுற்றது. (வி-உ)

* * *

நீடாமங்கலம்:— இவ்வூர் கழகக் கிளையின் செயற் குழுக் கூட்டம், 18—12—49-ல் தோழர் ஜி. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, 3—10—49ல் நடந்த கூட்டத்து தீர்மானப்படி, தற்காலிக செயற்குழு கலைக்கப்பட்டு, புதிய செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:— வீ. என். சந்திரசேகரன்; துணைச் செயலாளர்:— மா. வடிவேல்; பொருள் உறுப்பினர்:— ஜெ. இ. ர மதரன். விளம்பர உறுப்பினர்:— எம். ரெங்கராஜ். ஏனைய செயற்குழு வினர்:— என். ஜி சந்திரசேகரன், ஜி. வெங்கடாசலம், வி. விஸ்வநாதன், எஸ். ஆறுமுகம், ப. சுப்பையா, கி. மணியன், கே. பட்டுசாமி, ஆர். இராமு,மு. சேவு (வி. உ.)

* * *

காரை:— இவ்வூர் தி. மு. க உறுப்பினரும், மத்திய தி. மு. க. பொதுக் குழு உறுப்பினருமான தோழர் கே. பாப்பையா அவர்களின் உடன் பிறந்தார் இறந்த செய்தியமை குறித்து இவ்வூர் தி. மு. கழகத் தோழர்களும், திராவிடர் கழகத் தோழர்களும் சவ அடக்கத்திற்கு இடுகாடுவரை சென்று தங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர். சகோதரரை இழந்து வருந்தும் தோழர் கே. பாப்பையன் அவர்களுக்கும், அன்னார் குடும்பத்திற்கும் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகச் செயலாளர் தோழர் கே. இராதாமணாளன் எழுதுகிறார்.

* * *

தலையூர்:— இவ்வூர் கிளையின் செயற்குழுக்கூட்டம், 24-12-49 ல் கூடியது அதுபோது, திருச்சி மாவட்ட தி. மு. க மாநாட்டிற்குப் பிரதிநிதியாக தோழர் கே. சுப்பிரமணியம் அவர்களை அனுப்புவதெனத் தீர்மானிக்கப் பட்டது. பின்பு கீழ்க் கண்ட தீர்மானங்களை மாநாட்டிற்கு அனுப்பி வைப்பதென முடிவு செய்யப் பட்டது. (1) இப்பொழுதுள்ள ஆட்சியாளரால் தயாரிக்கப் பட்டுள்ள அரசியலை தி. மு. கழகம் ஏற்றுக் கொள்ள மறுப்பதோடு, அது திராவிட மக்களைக் கட்டுப் படுத்தாது என்பதைத்தெரிவித்துக்கொள்வது. (2) புதைவண்டி நிலையங்கள் வானொலி ஆகியவற்றின் மூலம் திராவிடர் என்றுக் கொள்ள மறுக்கும் இந்தியை வலுக் கட்டாயமாகப் புகுத்துவதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்):— இவ்வூர் கிளையின் செயற்குழுக்கூட்டம், 25-12-49 ல் தோழர் பாலசுந்தரம் தலைமையில் கூடியது. அதுபோது, கழகத் துவக்க விழாவைப் பொதுச்செயலாளரைக் கொண்டு நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. பின்பு, சென்னை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் பி. சந்திரமூர்த்தி, என். பாலசுந்தர ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (வி-உ)

* * *

திருப்பூர்:— இவ்வூர் மங்கலம் ரோடியுள்ள செயலாளர் கடையிலும், பலவடம் ரோடியுள்ள துணைச் செயலாளரின் அசோகா டீ கடையிலும் தி. மு. கழகத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கப்படும். இதுவரை உறுப்பினர்களாகச் சேராத தோழர்கள் உடனே வந்து பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் எனச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

* * *

முத்துப்பேட்டை:— இவ்வூர் திராவிட முன்னேற்ற கழக உறுப்பினரும், பகுத்தறிவு வாதியும், வெயிலிப் குமாரின் தோழர் இரெ. இராமமூர்த்தி அவர்கள் 20—12—49-ல் இறந்த செய்தியமை குறித்து, இவ்வூர் கிளையின் சார்பில் அன்னார் குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாகத் தோழர் அரு. மு. கணபதி (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

கும்பகோணம்:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 25-12-49 ல் பஞ்சக்காரத் தெரு, "பெரியார் மாளிகை" யில் நடைபெற்றது. தோழர் கே. கே. நீலமேகம் தலைமை வகித்தார். அது போது, நடந்த கழகத்துவக்கவிழாவின் வரவு செலவுக் கணக்கு சரி பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

வரவு செலவு விவரம்:—

நன்கொடை மூலம் வரவு	ரூ. 165-0-0
துவக்கவிழாச் செலவு	150-6-6
பொருள் உறுப்பினர் வசம் இருப்பு ரூ	14-9-6

பின்பு, வருகிற பிப்ரவரி மாதத்தில் தோழர் அண்ணாத்துரை அவர்களின் குழுவினரைக்கொண்டு கும்பகோணத்தில் இரு நாடகங்கள் நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்வதென்றும், அதற்கான ஏற்பாடுகளை தோழர் அண்ணாத்துரை அவர்களிடம் கலந்து பேசி முடிவு செய்ய தோழர் கே. கே. நீலமேகம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதாகவும் முடிவு செய்யப்பட்டது. (செ—உ)

* * *

சென்னை கோடம்பாக்கம்:— இவ்வூர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் மு. இளைய பெருமாள் பி. ஏ. அவர்களின் பெண் குழந்தை 'சூரிய குமாரி'யின் முதலாண்டு நிறைவு விழா 28—12—49-ல் கொண்டாடப்பட்டது. இதன் நினைவாக இவ்வூர் தி. மு. கழகக் கிளைக்கு ரூபாய் ஒன்று நன்கொடையாக அளிக்கப்பட்டது.

புது இந்தோனேஷியாவுக்கு எகிப்து அங்கீகாரம்

கெய்ரோ, டிச. 29—

புது இந்தோனேஷியாவை அங்கீகரிப்பதென்று எகிப்து மந்திரிசபை முடிவு செய்து விட்டது. இம்முடிவை எகிப்து பிரதம மந்திரி புது இந்தோனேஷியாவுக்குத் தெரிவித்து விட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

31—12—49

பழூர் ;— சி. பி. சிற்றரசு.

1—1—50

திருச்சி :— திருச்சி மாவட்ட தி. மு. கழக மாநாடு

திராவிடர் நாட்குறிப்பு

திராவிடர் டயரி-1950

இரண்டாம் பதிப்பு வெளியாகிவிட்டது

இப் பதிப்பில், முதற் பதிப்பின் பின்னர் தோன்றிய தி. மு. கிளைக் கழக உறுப்பினர் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன; இதுவரை கிடைத்துள்ள ஆர்டர்களுக்குப்போக சொற்ப பிரதிகளே மிச்சமுள்ளன.

500 பக்கம்—விலை அணா 12.

தபாலில் 0—14—0 பதிவுத் தபாலில் 1—2—0

விற்பனையாளர்க்குக் கழிவு 20% செலவு வேறு.

'போர்வாள்' அலுவலகம், பவழக்காரத் தெரு, சென்னை—1.

குறிப்பு:—திருச்சி மாநாட்டுப் பந்தலில் டயரிகள் கிடைக்கும்.

எல்லாம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மிடையேயுள்ள முறிக்க முடியாத காதலுணர்வுகளையும், அவர்கள் கையில் ஆட்சி கடிவாளம் வந்துற்ற வரலாற்றையும் நன்கு தெரிந்தவர்கள் ஓர் அணுவளவும் மறுக்க முடியுமா, தோழர் அச்சுத மேத்தா பேச்சையெனக் கேட்கிறோம். 'கண்டதே காட்சி—கொண்டதே கோலம்' என்ற தன்மையில், பண மூட்டைகளின் பாதுகாவலராய், பத்தாம்பசலிக் கொள்கையினராய் அரசாட்சி நடத்தி வரும் 'தேசபக்த திருக்கூட்டத்தாரின் போக்கு 'ரிப்பேர்' செய்ய முடியாத அளவுக்குப் போய்விட்டதென்பதை அவர்களுக்குள்ளாகவே நடைபெற்று வரும் 'மிர் [illegible] சண்டைகளாலேயே' உணரலாகும்.

பொருளாதாரச் சுரண்டல்' முதலாளிகள் ஆதிக்கம், சர்க்கார் திறமையின்மை - இவற்றைப் பற்றி மட்டுமே பேசி விளாசி - சொன மாரி பொழிந்து, சமூகத்திலுள்ள ஜாதிபேதங்களைப் பற்றி கனவில்கூட கருதாது. அவற்றைக் கவனமாய் அப்புறமே ஒதுக்கி வைத்துக் கொண்டுவந்த சோஷலிஸ்டுகள், இப்போது ஜாதி பேதாபேதங்களைப் பற்றியும், ஜாதி முறைக் கொடுமைகளைப் பற்றியும் துணிந்து, தீவிரமாகப் பேச முன் வந்திருப்பது கண்டு சம்சயத்தைவிட ஆச்சரியமே பெரிதும் உறுகிறோம்! மக்கள் கூட்டமொன்றை அடிமைத் தனத்தில் வைத்திருக்கும் சமுதாயம் பாவம் செய்யும் சமுதாயமல்லவா? பல ருழைப்பை ஒரு சிறு கூட்டம் உண்டு கொழுப்பது நியாயமாகுமா? ஒரு வகுப்பாருக்கு இன்னொருவகுப்பார், எஜமானராக இருப்பது காட்டுமிராண்டித் தனமல்லவா? என்று தோழர் பட்டவர்த்தன் ஆவேசத்தோடு இப்போது கேட்டிருப்பதை நாம் இந்நாட்டில் பல்லாண்டு காலமாகவே கேட்டு வருகிறோம். ஆரம்ப காலத்தில் 'எதிரொலி' மட்டுமே நமக்குப் பதிலாக இருந்தது. இப்போதே, காலப்போக்கில், நம் கொள்கைக்கு ஏற்றமும் வியாபகமும் உண்டாகி வருகிறது அச்சுத பட்டவர்த்தன் போன்றோரும் திரத்துடன் துணிந்து சொல்லக் கூடிய நிலைக்கு—சொல்ல வேண்டிய அவசியத்துக்கு வந்திருப்பது கண்டு பெருமைப்படுகிறோம்.

கோவில் பட்டியில் நாடகம்

கோவில் பட்டி, பலகை [illegible], சிலோன் தியேட்டரில் 2-1-50 திங்கள் இரவு 10 மணிக்கு எம். ஆர். எம். நாடகசபையாரால் நேஷனல் எம். ஆர். மக்கள் நடிக்கும் 'மருமகள்' என்னும் நாடகம் நடத்தப்படும். நகரசபைத் தலைவர் தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து தலைமை வகிப்பார். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி நாடகத்தைத் துவக்கிவைப்பார்.

இனி நடப்பவை

சென்னை-தமிழ் வைத்தியர்களின் பொதுக் கூட்டமொன்று, 30-12-49 வெள்ளி மாலை 5-30 மணிக்கு, பழைய வண்ணாரப் பேட்டை திருவொற்றியூர் ஹைரோடு, 83 என்னுள்ள கட்டிடத்தில் நடைபெறும். முன்னாள் அமைச்சர்தோழர் எஸ். முத்தையா அவர்கள் தலைமை வகிப்பார். தோழர்கள் பண்டித எஸ். எஸ். ஆனந்தம், டாக்டர் சி. துரைராசன் ஆகியோர் 'தோசனுகா செறிகள்' என்பது பற்றி பேசுவர்.

* * *

சேலம்:-தம்மாம்பட்டை மெயின் ரோடு தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 1-1-50 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு நடைபெறும் செயற்குழுவினரனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

பொன்மலை [illegible]:-[illegible] தி. மு. வாலிபர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் 31-12-49 இரவு 9 மணிக்கு நடைபெறும். பின்பு தோழர் கோபால் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

* * *

கோவை:—நகர தி. மு. க. சொற்பயிற்சிக் கூட்டம், 1-1-50 ஞாயிறு காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் தி. மு. க. தோழர்களனைவரும் கலந்து கொள்ளலாம். தி. மு. க. தோழர்கள் மட்டுமே அனுமதிக்கப் படுவர்.

* * *

சேலம்:—அம்மாபேட்டை மெயின் ரோடு கிளையின் சொற்பயிற்சிக்கூட்டம் 1-1-50 ஞாயிறு இரவு 7-30 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் ஸ்டாலின் கே. இராமசாமி தலைமையில் நடைபெறும் "இளைஞர்களும், எதிர்காலமும்" என்பது பற்றி பலர் பேசுவர்.

சென்னைக்கு சிமெண்டு

சென்னை மாகாணத்துக்குத் தனியாக 16,500டன் சிமெண்டை இந்திய சர்க்கார் ஒதுக்கியுள்ளன தொழிற்சாலைகளில் உற்பத்தி அதிகரித்து வருவதால், சிமெண்ட சப்ளை நிலைமை திருப்திகரமென்று கூறப்படுகிறது.

போகிற போக்கில்...!

'தமிழிசைச் சங்கத்தின் தேவாரப்பண் ஆராய்ச்சி முடிவு: ஓதுவார்களின் ஒத்துழைப்புக்கு ஆர். கே சண்முகம் பாராட்டு'

—செய்தித் தலைப்பு

இனி, அடுத்தாற்போல் நாலாயிரத்திவ்யப் பிரபந்தம், கம்பராமாயண—மகாபாரத இசைப் பாடல்கள் மன்மதன் எரிந்த கட்சி எரியாத கட்சி, லாவணிப்பாடல்கள், பேய்—பிசாசு—முனி இவற்றை ஓட்டும் மின்சாரக் கவிதைகள், சுரமெடுத்துக் காலரா நிவர்த்திக்கும் பாட்டுகள் ஆகியவற்றையும் தொடர்ந்தாற்போல் சைவரப்பற்று, பண்ணினசங்கட் புகுந்து விலாசென போசனைக் கூறுகிறார், ஒருமொழியர் வலர்! இதற்கு நூறாறுகணக்கானோரின் ஒத்துழைப்பும் உடனிருப்பும் (வேறு வேலையில்லாத 'மகத்தான' காரணத்தால்) கிடைக்குமென்றும் அவர் யூகிக்கிறார்!

* * *

'கடைசி விமானத்தையும் சியாங் இழந்தார்'

—செய்தித்தலைப்பு

கடைசி நம்பிக்கையையும் இழக்கும் நாள் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது!

* * *

'இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே ராஜியத் துறையிலும் போர் தவிர்க்க முடியாதபடி ஏற்பட்டே தீரும்'

—மகாசபைகரே

எடை போட முடியாத எவ்வளவு பெரிய நல்லெண்ணம், பாருங்கள்!

* * *

'டச்சு காலனி ஆட்சி அஸ்தமனம்'

—செய்தித்தலைப்பு

அஸ்த மனம் ஆன அந்த நாளே (சூரியனைப்போல) உதயமாகிவிடுமோ வெனச் சிலர் அஞ்சுவதாகக் கேள்வி!

* * *

'சுகர்னோவின் பட்டணப் பிரவேசம்: ஜாகர்த்தாவில் பெருந்து மக்கள் பேரானந்தம்'

— செய்தித் தலைப்பு

இதுவரையில் காட்டில் கடமாடியிருப்பாரே! சுகர்ணோவின் போக்கால் நாட்டு விலங்குகள் கண்ணீர்ப் பெருக்கிப் பிருக்கலமென்றும் கருதப்படுகிறது

கால் நடை இன்சூரன்ஸ் திட்ட அவசியம்

ஆராய்ச்சி நிலையம் நிறுவி ஆவன வேலை தொடங்க வேண்டும்

சென்னை கால்நடைப் பயிற்சிக் கல்லூரியையொட்டி ஆராய்ச்சி நிலையமொன்றும் அமைக்கப்பெற வேண்டிய அவசியம் டிச. 6-ந் தேதியன்று மேற்படி கல்லூரிக் கட்டிடத்தில் நடைபெற்ற மாகாண கால்நடைகள் பற்றிய மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது

சிறிது நேர விவாதத்துக்குப் பின், ஆந்திராவிலும் உடனடியாகக் கால்நடைப் பயிற்சிக் கல்லூரியொன்று நிறுவவேண்டுமென மாநாடு சிபார்சு செய்தது.

பரீட்சார்த்த முறையாகவாவது கால்நடை இன்சூரன்ஸ் திட்ட முறையொன்றை சர்க்கார் மேற்கொண்டு பார்க்க வேண்டுமென மாநாடு வற்புறுத்திற்று.

கால் நடைகளுக்குத் தேவையான பிண்ணாக்கு. பருத்திக் கொட்டை முதலியன நியாயமான விலைக்கு ரேஷன் கடைகள் மூலம் கிடைக்க ஏற்பாடு செய்தால், பால் நெருக்கடியை எளிதில் சமாளிக்கலாமென்றும் மாநாடு கருதிற்று.

அஸ்ஸாமில் நிலக்கரி சுரங்கங்கள்

அஸ்ஸாமைச் சேர்ந்த குன்றுகளில் 100 கோடி டன் உயர்ந்த நிலக்கரி கிடைக்கக்கூடிய சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நிலக்கரியைத் தோண்டியெடுப்பதற்கான பூர்வாங்க வேலைகளும் ஆரம்பமாகி விட்டனவென்று தெரிகிறது

மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவ இலாகா

சென்னை மருத்துவக் கல்லூரியோடும் சர்க்கார் ஜெனரல் மருத்துவ விடுதியோடும் இணைவு பெறும் தனி பல்வைத்திய இலாகாவொன்றை நிறுவ சென்னை சர்க்கார் அனுமதித்துவிட்டனர். பி. டி. எஸ். டிகிரி பெற மாணவர்கள் இதில் பயிற்சி பெறலாம்,

விற்பனைக்குத் தயார்!

இன்பத் திராவிடத்தில் ஒரு புதுமை நிறைந்த

1950 ஆண்டுகாலண்டர்

பேரறிஞர் சி என். அண்ணாத்துரை
புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
உயர்திரு, கே. கே. நீலமேகம்
,, இரா. நெடுஞ்செழியன்
,, என். வி. நடராசன்
,, ஏ. வி. பி. ஆசைத்தம்பி
,, ஈ. வி. கே. சம்பத்
,, க. அன்பழகன்
,, கே. மதியழகன்
,, மு. கருணாநிதி
,, இராமாமிர்தத்தம்மையார்
,, சத்தியவாணிமுத்து
மறைந்த செல்வங்கள்:
,, ஏ. டி. பன்னீர்செல்வம்
,, அழகிரிசாமி
,, என். அர்ச்சுனன்

முதலியவர்கள் திரு உருவப் படங்கள் ஒருங்கே அமையப்பெற்றதும், மிகவும் உன்னதமாக வழவழப்பான ஆர்ட் தாளில் பல கலரில் கண் கவரும் முறையில் அச்சிடப்பட்டதுமான எல்லாத் தலைவர்களையும் கொண்ட ஓரே காலண்டர்

"அளவு 18 × 11"

குறைந்த விலை 0-6-0

வியாபாரிகட்கு தக்ககமிஷன் உண்டு. சொற்ப பிரதிகளே வெளியிடுவதால், தங்கட் தேவைக்கு இப்பொழுதே எழுத வேண்டுகிறோம். விவரங்கட்கு:—

திராவிடன் பதிப்பகம்,
P. B No. 18, வேலூர் N. A.

கலைக் கழக நிகழ்ச்சி

பொன்மலை, டிச 27—

இவ்வூர் கலைக் கழகத்தின் சார்பில் 24—11—49 மாலை 5-30 மணிக்கு இந்தியர் வாசகசாலை மன்றத்தில் இலக்கியச் சொற்பொழிவுத் துவக்க விழா நடைபெற்றது. திருச்சி மாவட்ட [illegible] துணைத்தலைவர் (டிப்டி கலெக்டர்) தோழர் தொ. மு. பரம்பரைச் சொக்கலிங்கம் எம். ஏ. அறிவுரையாற்றினார்.

திருவெறும்பூர் தோழியர் டி. எஸ். கோமதி, தோழியர்கள் வி. ஏ. கமலா (பிடில்) திருக்கோகர்ணம் டி. எஸ். ரங்கராஜன் (மிருதங்கம்) ஆகியோருடன் நடைபெற்ற இன்னிசை விருந்து அளித்தார். இறுதியாக [illegible] தமிழ்த் திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டு நன்றிகூறலுடன் விழா முடிவுற்றது.

முத்தமிழ் நூல் நிலையம்

மேட்டுப்பாளையம், டிச 25—

மேட்டுப்பாளையம் காசுக்கடைத் தெருவில் 11—12—49 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு இரா. தங்கராச தலைமையில் முத்தமிழ் நிலையம் துவக்கப்பட்டது. திரு. இரா. தங்கராச தலைவராகவும், திரு. அ. நடராசு உபதலைவராகவும் திரு மா. கிருட்டிணசாமி செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் எழுவர் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருச்சி மாவட்ட
திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

★

1-1-50 ஞாயிறு காலை 8 மணிக்கு
ஆசிரியர் வேலாயுதம் பந்தலில் நடைபெறும்

★

தலைவர் :- தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து

துவக்கிவைப்பவர்:- ,, பி. பழனிச்சாமி

வரவேற்புத்தலைவர்:- ,, என். சங்கரன்

பொதுச் செயலாளர் சி. என். அண்ணாத்துரையும்
மற்றும் பலரும் கலந்துகொள்வர்

★

இரவு 9-30 மணிக்கு சி. என். ஏ., கே. ஆர். ஆர். நடிக்கும்
“சந்திரமோகன்” நாடகம் நடைபெறும்.

சென்னை தி. மு. க மாநாடு

வரவேற்புக் கமிட்டி கூட்ட நடவடிக்கை

28-12-49 மாலை 6-மணிக்கு சென்னை மண்ணடி, முத்து மாரிச்செட்டித் தெரு, ‘மாலை மணி’ அலுவலகத்தில் சென்னை மாவட்ட தி. மு. கழக மாவட்ட மாநாட்டு வரவேற்புக் கமிட்டிக் கூட்டம், வ. க. தலைவர் தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் கூடி, கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

(1) மாநாட்டைத் துவக்கி வைப்பதைக் குறித்து, முன்பு இக்கமிட்டி செய்திருந்த முடிவைத் திருத்தி, மாநாட்டைத் துவக்கிவைப்பவராக மதுரைத் தோழர் எஸ். முத்து அவர்களை அழைப்பதெனவும்.

(2) மாநாட்டில் சொற்பொழிவாற்ற தோழியர் மூவாலூர் ராமாமிர்தம் அவர்களையும், தோழர்கள் சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி, டி. கே. சீனிவாசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரையும் அழைப்பதெனவும்

(3) இம்மாநாட்டின் தொடர்ச்சியாகவே, கலை மாநாட்டையும் நடத்துவதா என்பதைக் குறித்து, பொதுச் செயலாளர் தோழர் சி. என். ஏ. அவர்களைக் கலந்து முடிவு செய்து கொள்ளுவதெனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டன

நன்றி கூறலுடன் இரவு 7-30மணிக்குக்கூட்டம் இனிது முடிவுற்றது. (வி-உ)

கட்டாய கடன் திட்டம் கைவிடப்பட்டது

சென்னை நிதி அமைச்சர் கொண்டு வந்த, பொது மக்களிடமிருந்து கட்டாய கடன் வாங்கும் திட்டம், கைவிடப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

விவசாயிகளிடமிருந்து ஓர் ஆண்டு நிலவரிக்குச் சமமான தொகையைக் கட்டாயக் கடனாகப் பெறுவது என்ற திட்டத்துக்கு, நாட்டிலே எதிர்ப்பு தோன்றியிருப்பதை உத்தேசித்து அரசினர் மேற்கொண்டு அத்திட்டத்தை வற்புறுத்துவதில்லையென முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இது பற்றி விசாரித்தபோது நிதி அமைச்சர், இந்தக் கடன் வாங்கும் திட்டம் இப்போது கவனிக்கப்படவில்லையென்று கூறினார்.

நல்ல வேளையாக நாட்டு மக்களின் எதிர்ப்புக்கு மதிப்பு கொடுத்து திட்டத்தைக் கைவிட்டாரே அமைச்சர் அந்த அளவிலே அவரை நாம் பாராட்ட வேண்டியதுதான்.

28,000 குழந்தைகளைக் காணோம்!

கிரீஸ் துக்கம் கொண்டாடும்!

ஏதென்ஸ், டிச. 29— கம்யூனிஸ்டு கொரில்லாப் போர் கிரீஸில் நின்று போன பின்பும் கூட அவர்கள் கடத்திச் சென்ற 28,000 கிரேக்க குழந்தைகள் என்ன ஆனார்கள் என்று எதுவும் தெரியவில்லை. இதை உத்தேசித்து இன்று கிரீஸ் தேசம் முழுவதும் துக்கம் கொண்டாடப்படும். கிரீஸ் பத்திரிகைகள் கரும்பார்டர்களுடன் வெளிவரும். கொடிகள் பாதிகொடி மரத்தில் பறக்கவிடப்படும்.

கடத்திச் செல்லப்பட்ட குழந்தைகள் காமின்பார்ம் சிறை முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சென்னைக்கு ‘பெட்ரோல்’ பங்கீடு

இந்திய சர்க்கார் 1950 ஜனவரி முதல் மார்ச் வரையிலான முதல் மூன்று மாதங்களுக்கு 4916 ஆயிரம் காலன் பெட்ரோல் ஒதுக்கியுள்ளனர். இந்த மூன்று மாதங்களுக்கு 5070 ஆயிரம் காலன் ஒதுக்கப் பெற்றுள்ளது. இப்படி 154 ஆயிரம் காலன் மொத்தத்தில் குறைந்து விட்டபோதிலும், தனிப்பட்டவர்களுக்கு அளித்துப் பெற்று வரும் பங்கே, இதனால் பாதிக்கப்பட்டு விடாதெனக் கூறப்படுகிறது.

வானொலி

(31-12-49 சனிக்கிழமை)

சென்னை
[211·8 மீட்டர்கள்]

காலை :
7-15 தமிழில் செய்திகள்
7-30 எம். ரங்கராவ்—வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. ந.)

பிற்பகல் :
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. ந.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 சிறுவர் நிகழ்ச்சி

மாலை :
5-30 இசை விழா ஒலிப்பதிவு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 என். ராஜலட்சுமி—பாட்டு

இரவு :
7-00 டி. என். கல்யாணம்-பாட்டு
7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டு (இ. ந.)
7-45 வெங்கடசாமி நாயுடு—வயலின் என். ராமசாமி-மிருதங்கம்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-30 இசை விழா (ஒலிப்பதிவு)
10-30 முடிவு

திருச்சி
[395·8 மீட்டர்கள்]

காலை :
7-15 தமிழில் செய்திகள்
7-30 என். சிவசுப்ரமணிய பிள்ளை—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 ஆர். வைத்தியநாதன்—வயலின்
8-30 காலை இசை (இசைத்தட்டு)

பிற்பகல் :
1-00 ஆர். வைத்தியநாதன்—வயலின்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பல்கலைக் கழகங்களுக்கு
2-00 தமிழில் செய்திகள்
2-10 பல்கலைக் கழகங்களுக்கு (கல்லூரிச் செய்திகள்)

மாலை :
5-00 என். சிவசுப்ரமணியபிள்ளை—பாட்டு
5-30 சென்னையில் உள்ளபடி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 மலர்க்கொடி (இ. ந.)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :
7-15 தமிழில் செய்திகள்
7-30 டி. எம். [illegible]—பேச்சு
7-45 சென்னையில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 டி. எம். கமலா—பாட்டு
9-30 சென்னையில் உள்ளபடி
10-00 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street. Madras-1.